சாலையோர மரத்தில் மோட்டார் சைக்கிள் மோதியதில் தாய், மகள் உயிரிழப்பு

பெரம்பலூர், ஏப். 30: பெரம்பலூர் அருகே வியாழக்கிழமை சாலையோர மரத்தில் மோட்டார் சைக்கிள் மோதியதில் தாய், மகள் உயிரிழந்தனர்.

திருச்சி மாவட்டம், லால்குடி அருகே உள்ள கருடமங்கலத்தைச் சேர்ந்தவர் கருப்பையா மனைவி வினிதா (31). கருப்பையா சிங்கப்பூரில் ஓட்டுநராகப் பணிபுரிந்து வருகிறார்.

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், கொளக்காநத்தம் கிராமத்தில் அழகு சாதனப் பொருள்கள் விற்பனை நிலையம் வைத்துள்ள வினிதா, தனது குழந்தைகளான ஹேமநாத் (11), ஹேமா ஸ்ரீ (7) ஆகியோரை பெரம்பலூரில் உள்ள கராத்தே பயிற்சி வகுப்பில் சேர்த்துள்ளார்.

இந்நிலையில், வியாழக்கிழமை தனது குழந்தைகளை கராத்தே பயிற்சி வகுப்பில் விடுவதற்காக மோட்டார் சைக்கிளில் பெரம்பலூர் நோக்கி சென்று கொண்டிருந்தார். அயிலூர் குடிக்காடு அருகே சென்றபோது, எதிர்பாராதவிதமாக கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் சாலையோர மரத்தில் மோதியது. இதில் பலத்த காயமடைந்த வினிதா, ஹேமாஸ்ரீ ஆகியோர் நிகழ்விடத்திலேயே உயிரிழந்தனர்.

தகவலறிந்த மருவத்தூர் போலீஸார் நிகழ்விடத்துக்குச் சென்று, காயமடைந்த ஹேமநாத்தை மீட்டு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். மேலும் உயிரிழந்த இருவரின் சடலங்களை மீட்டு பிரேத பரிசோதனைக்காக மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். புகாரின்பேரில் மருவத்தூர் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

பிரசவத்தில் தாய்-சேய் உயிரிழப்பு: போலீஸார் விசாரணை

அம்பாசமுத்திரம், ஏப். 30: திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் பிரசவத்தின்போது குழந்தையும், தாயும் உயிரிழந்தது தொடர்பாக போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

தென்காசி மாவட்டம், பொட்டல்புதூர், செக்கடித் தெருவைச் சேர்ந்தவர் சாகுல் ஹமீது மகன் யூசுப் பாஷா (30). இவருக்கும் ஜன்னத் நிஷா என்பவருக்கும் கடந்த ஆண்டு ஏப். 30ஆம் தேதி திருமணமானது.

இந்நிலையில், சில நாள்களுக்கு முன் ஜன்னத் நிஷா பிரசவத்துக்காக அம்பாசமுத்திரத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு புதன்கிழமை குழந்தை பிறந்தது. ஆனால், குழந்தை உயிரிழந்ததாகத் தெரிகிறது. மேலும், ஜன்னத் நிஷாவுக்கு அதிக ரத்தப்போக்கு ஏற்பட்டதாகக் கூறி திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். அங்கு பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கெனவே இறந்துவிட்டதாகத் தெரிவித்தனர்.

இதுகுறித்து யூசுப் பாஷா அளித்த புகாரின்பேரில், அம்பாசமுத்திரம் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர்.

வேதாரண்யத்தில்

உப்பு அள்ளி தியாகிகளுக்கு அஞ்சலி

வேதாரண்யம், ஏப். 30: நாகை மாவட்டம், வேதாரண்யத்தில் உப்பு சத்தியாகிரகப் போராட்டம் நடைபெற்றதன் 96-ஆவது ஆண்டு நினைவையொட்டி, உப்பு அள்ளி தியாகிகளுக்கு வியாழக்கிழமை அஞ்சலி செலுத்தப்பட்டது.

வேதாரண்யத்தில் ஆங்கிலேயர்களுக்கு எதிரான உப்பு சத்தியாகிரகப் போராட்டம் 1930 ஏப்ரல் 30-ஆம் தேதி மூதறிஞர் ராஜாஜி தலைமையில் நடைபெற்றது. இந்த சம்பவத்தை நினைவு கூரும் வகையில், ஆண்டுதோறும் ஏப்ரல் 30-ஆம் தேதி உப்பு அள்ளி, தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகிறது.

அதன்படி, நிகழாண்டு வேதாரண்யத்தை அடுத்த அகஸ்தியம்பள்ளியில் உள்ள உப்பு சத்தியாகிரக நினைவு தூணில் மலர்வளையம் வைத்து, சுதந்திர போராட்ட தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர், நினைவு தூண் அருகே தியாகிகளுடன், சமூக ஆர்வலர்கள், காங்கிரஸார் உப்பு அள்ளி தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தினர்.

நிகழ்ச்சிக்கு முன்னாள் எம்.பி. பி.வி. ராஜேந்திரன் தலைமை வகித்தார். உப்பு சத்தியாகிரகப் போராட்டத்தில் பங்கேற்று தண்டனை பெற்ற சர்தார் வேதரத்தினத்தின் பேரனும், குருகுல நிர்வாகியுமான அ. வேதரத்தினம் முன்னிலை வகித்தார். காங்கிரஸ் கட்சி மூத்த தலைவர்களில் ஒருவரான கோபண்ணா, பேராசிரியர் பழனித்துரை, காங்கிரஸ் மாவட்ட தலைவர் பி.வி.ஆர். விவேக், முன்னாள் தலைவர் கனகராஜ், திருச்சி உப்பு சத்தியாகிரக நினைவுத்தூணில் இருந்து புறப்பட்டு யாத்திரையாக வந்த சக்திசெல்வ கணபதி தலைமையிலான காந்தியவாதிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

முன்னதாக, வேதாரண்யம் ராஜாஜி பூங்காவிலிருந்து தொண்டர்கள், உப்பளத் தொழிலாளர்கள் பேரணியாக சென்று நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

வேதாரண்யத்தில் உப்பு அள்ளி தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்திய காங்கிரஸார் உள்ளிட்டோர்.

நுங்கு பறிக்கும்போது மின்சாரம் பாய்ந்து கல்லூரி மாணவர்கள் இருவர் உயிரிழப்பு

ஸ்ரீபெரும்புதூர், ஏப். 30: சுங்குவார்சத்திரத்தை அடுத்த சிறுமாங்காடு பகுதியில் நுங்கு பறிக்கும்போது மின் கம்பியில் அரிவாள் உரசியதில் மின்சாரம் பாய்ந்து கல்லூரி மாணவர்கள் இருவர் உயிரிழந்தனர்.

காஞ்சிபுரம் மாவட்டம், சுங்குவார்சத்திரத்தை அடுத்த சிறுமாங்காடு சந்தியம்மன் கோயில் தெருவைச் சேர்ந்தவர்கள் தட்சிணாமூர்த்தி (17), டில்லி கணேஷ் (17). இவர்கள் இருவரும் தனியார் கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்து வந்தனர்.

விடுமுறையையொட்டி டில்லி கணேஷ், தட்சிணாமூர்த்தி இருவரும் அரிவாள் மாட்டிய கம்பு மூலம் நுங்கு பறிக்க முயன்றபோது அருகில் சென்று கொண்டிருந்த மின்கம்பியில் கம்பு உரசியதில் மின்சாரம் பாய்ந்து இருவரும் மயங்கி விழுந்துள்ளனர்.

தட்சிணாமூர்த்தி. டில்லி கணேஷ்.

இதுகுறித்து தகவல் அறிந்த அப்பகுதி பொதுமக்கள் மயங்கிய டில்லி கணேஷ் மற்றும் தட்சிணாமூர்த்தியை ஸ்ரீபெரும்புதூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். அங்கு அவர்களை பரிசோதித்த மருத்துவர்கள் அவர்கள் ஏற்கனவே இறந்துவிட்டதாகத் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து சுங்குவார் சத்திரம் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். நுங்கு பறித்தபோது மின்சாரம் பாய்ந்து கல்லூரி மாணவர்கள் இருவர் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சிறுமி கொலை வழக்கில் இளைஞர் குற்றவாளி: மே 5-இல் தண்டனை அறிவிப்பு

புதுச்சேரி போக்ஸோ நீதிமன்றம்

புதுச்சேரி, ஏப். 30 : புதுச்சேரியில் 9 வயது சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலையான வழக்கில் கைதான இளைஞர் குற்றவாளி என புதுச்சேரி போக்ஸோ நீதிமன்றம் வியாழக்கிழமை தீர்ப்பளித்தது. அவருக்கான தண்டனை விவரம் மே 5-ஆம் தேதி அறிவிக்கப்படவுள்ளது.

புதுச்சேரி முத்தியால்பேட்டையைச் சேர்ந்த 9 வயது சிறுமி கடந்த 2024 மார்ச் 2-ஆம் தேதி மாயமானார். இது குறித்த புகாரின்பேரில் முத்தியால்பேட்டை போலீஸார் விசாரணை நடத்தி வந்த நிலையில், மார்ச் 5-இல் சிறுமியின் சடலம் வீட்டின் அருகேயுள்ள கழிவுநீர் கால்வாயில் சாக்குப் பையில் சுற்றப்பட்டு கிடந்தது.

இதுகுறித்து போலீஸார் நடத்திய விசாரணையில், அதே பகுதியை சேர்ந்த கருணாஸ் (20) என்பவர் கஞ்சா போதையில் சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்ததும், இதற்கு அப்பகுதியைச் சேர்ந்த விவேகானந்தன் (56) உடந்தையாக இருந்ததும் தெரிய வந்தது. இதையடுத்து, கருணாஸ், விவேகானந்தன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். புதுச்சேரி காலாப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த விவேகானந்தன் அங்கு கழிப்பறையில் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார். கருணாஸ் மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

புதுச்சேரி போக்ஸோ விரைவு நீதிமன்றத்தில் இவ்வழக்கு தொடர்பாக 54 பேரிடம் விசாரணை நடத்தப்பட்டது. விவேகானந்தன் தற்கொலை செய்ததால் அவர் மீதான குற்றச்சாட்டுகள் ரத்து செய்யப்பட்டன. விவேகானந்தனின் தனிமையான வீட்டுக்கு கருணாஸ் சிறுமியை அழைத்து சென்று பாலியல் வன்கொடுமை செய்து, பின்னர் கழுத்தை நெரித்து கொலை செய்தது, உடலை சாக்கு பையில் சுற்றி கழிவுநீர் வாய்க்காலில் வீசியது உள்ளிட்ட குற்றங்களுக்கான ஆதாரங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

இவ்வழக்கில் ஆஜரான அரசு தரப்பு சிறப்பு வழக்குரைஞர் பச்சையப்பன், 48 பக்கங்கள் கொண்ட தனது எழுத்துபூர்வ வாதத்தை முன்வைத்தார். அதில், இந்த வழக்கு அரிதிலும் அரிதான குற்றங்களின் வரம்பில் உள்ளதால் நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்டவரை கடுமையாக தண்டித்து உச்சபட்சமாக மரண தண்டனை விதிக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். இந்த வழக்கின் இறுதி விசாரணை மே 5-ஆம் தேதி நடைபெறவுள்ளது. இந்த வழக்கு விசாரணையையொட்டி புதுவை நீதிமன்றத்தில் பலத்த போலீஸ், கமாண்டோ போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

காலமானார் முன்னாள் எம்எல்ஏ வி.எஸ்.காளிமுத்து

திருப்பூர், ஏப்.30: திருப்பூர் மாவட்டம், தாராபுரம் (தனி) சட்டப்பேரவைத்தொகுதியின் முன்னாள் எம்எல்ஏ வி.எஸ்.காளிமுத்து (65) உடல் நலக்குறைவால் உயிரிழந்தார்.

வி.எஸ்.காளிமுத்து

தாராபுரம் அருகேயுள்ள வீராச்சிமங்கலத்தைச் சேர்ந்தவர் வி.எஸ்.காளிமுத்து. திருமணமாகாத இவர் காங்கிரஸ் கட்சியின் மீது கொண்ட ஆர்வம் காரணமாக அதில் சேர்ந்து, வீராச்சிமங்கலம் ஊராட்சி மன்றத் தலைவராக இருந்துள்ளார். பின்னர், கடந்த 2016-ஆம் ஆண்டு முதல் 2021-ஆம் ஆண்டு வரை தாராபுரம் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினராக பதவி வகித்துள்ளார்.

மேலும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி செயற்குழு உறுப்பினர், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி செயற்குழு உறுப்பினர் பதவி வகித்துள்ள இவருக்கு திடீரென புதன்கிழமை உடல் நலக் குறைவு ஏற்பட்டதால், கட்சி நிர்வாகிகள் அவரை தாராபுரம் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கிருந்து தீவிர சிகிச்சைக்காக கோவையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அவரது இறுதிச் சடங்கு வீராச்சிமங்கலம் கிராமத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது.

சிறுவன் ஓட்டிய கார் கவிழ்ந்து சிறுமி உயிரிழப்பு

களக்காடு, ஏப். 30: திருநெல்வேலி மாவட்டம், களக்காடு அருகே சிறுவன் ஓட்டிச்சென்ற கார் கவிழ்ந்ததில், அதிலிருந்த 4 வயது சிறுமி உயிரிழந்தார்.

களக்காடு அருகே கீழதுவரைக்குளத்தைச் சேர்ந்தவர் முருகன் (45). பெட்ரோல் நிரப்புவதற்காக இவரது காரை, அண்ணன் பால்பாண்டியின் 17வயது மகன் புதன்கிழமை ஓட்டிச் சென்றாராம். முருகன் மகள் ஹன்சிகா (4), அதே பகுதியைச் சேர்ந்த உறவினர்களின் குழந்தைகளான தினேஷ் (10), பிரதீப் (9), லித்திஸ் (8) ஆகிய 4 பேரும் உடன் சென்றனர்.

களக்காட்டில் பெட்ரோல் நிரப்பிவிட்டு, துவரைக்குளம் நோக்கி மங்கம்மாள் சாலையில் வந்தபோது, கார் கட்டுப்பாட்டை இழந்து சாலையோரப் பள்ளத்தில் கவிழ்ந்ததாம். இதில், ஹன்சிகா நிகழ்விடத்திலேயே உயிரிழந்தார். காயமடைந்த 4 பேரும் திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

முருகன், சிறுவன் ஆகியோர் மீது களக்காடு போலீஸார் வியாழக்கிழமை வழக்குப் பதிந்து, விசாரணை நடத்தி வருகின்றனர்.

கேரள சகோதரிகள் இருவர் கன்னியாகுமரியில் தற்கொலை

கன்னியாகுமரி, ஏப். 30: கன்னியாகுமரிக்கு சுற்றுலா வந்து மாயமான அமெரிக்கவாழ் கேரள சகோதரிகள் சடலங்கள் வியாழக்கிழமை மீட்கப்பட்டன. அவர்கள் தற்கொலை செய்து கொண்டதாக, போலீஸாரின் விசாரணையில் தெரியவந்தது.

கேரள மாநிலம், கோட்டயம் கிடாங்கர் பகுதியைச் சேர்ந்த தம்பதி பிலிப் - மேரி. இவர்களது 3 மகள்களில் மூத்தவரான எலிசபெத் (38) திருமணமாகி லண்டனில் வசித்துவருகிறார். மற்ற இருவரான ஆனி (35), மீரா (32) ஆகியோர் அமெரிக்காவில் பணியாற்றி வந்தனர். அவர்கள் ஆண்டுக்கு ஒருமுறை கேரளத்துக்கு வருவது வழக்கம்.

அதன்படி, இருவரும் ராமேசுவரம், மதுரை உள்ளிட்ட இடங்களை சுற்றிப் பார்த்துவிட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை (ஏப். 26) கன்னியாகுமரிக்கு வந்து தனியார் விடுதியில் தங்கினர்.

பின்னர், வெளியே சென்ற அவர்கள் 2 நாள்களாகியும் விடுதிக்குத் திரும்பவில்லை. அவர்கள் கொடுத்திருந்த கைப்பேசி எண்ணில் அவர்களது தாயைத் தொடர்பு கொண்டு விடுதி ஊழியர்கள் தகவல் தெரிவித்தனர்.

அதன்பேரில், பிலிப், அவரது அண்ணன் ஷிஜூ ஆகியோர் வந்து இருவரையும் தேடினர்; எந்தத் தகவலும் கிடைக்காததால் காவல் நிலையத்தில் புகாரளித்தனர். உதவி ஆய்வாளர் வினிஸ் பாபு, போலீஸார் வழக்குப் பதிந்து தீவிரமாக தேடி வந்தனர்.

இந்நிலையில், வியாழக்கிழமை காலை கன்னியாகுமரி வாவத்துறை கடல் பகுதியில் ஆனி, மீரா ஆகியோரின் சடலங்கள் கரைஒதுங்கிக் கிடந்தன. கன்னியாகுமரி டி.எஸ்.பி ஜெயச்சந்திரன், போலீஸார் சடலங்களைக் கைப்பற்றி கூறாய்வுக்காக ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர்.

மீரா ஆனி

இது குறித்து டிஎஸ்பி ஜெயச்சந்திரன் கூறியது: சகோதரிகள் இருவரும் வாவத்துறை பகுதியில் உள்ள தூண்டில் வளைவு பாலத்தில் நடந்து செல்லும் காட்சி சிசிடிவி-யில் பதிவாகியிருந்தது. ஆனால், அவர்கள் திரும்பி வந்ததாகத் தெரியவில்லை. எனவே, அவர்கள் கடலில் குதித்து தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின்பேரில் தேடி வந்தோம். இந்நிலையில், அவர்களது சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. தற்கொலை செய்துகொள்ளும் முன்பு கைப்பேசி மூலம் பெற்றோருக்கும், சகோதரிக்கும் குறுந்தகவல் அனுப்பியுள்ளனர். அதில், 'எங்களை வளர்த்து ஆளாக்கிய பெற்றோருக்கு நன்றி. உங்களை நாங்கள் சிரமப்படுத்த விரும்பவில்லை. எங்களது உடல்களை கன்னியாகுமரியில் அடக்கம் செய்யுங்கள்' எனக் கூறியுள்ளனர் என்றார் அவர்.

அமெரிக்கவாழ் கேரள சகோதரிகளின் தற்கொலைக்கான காரணம் குறித்து போலீஸார் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.

தங்கம் பவுனுக்கு ரூ.1,600 உயர்வு

சென்னை, ஏப்.30: தங்கத்தின் விலை வியாழக்கிழமை பவுனுக்கு ரூ.1,600 உயர்ந்து ரூ.1,12,800-க்கு விற்பனையானது.

கடந்த ஏப். 27-இல் பவுனுக்கு ரூ.240 உயர்ந்து ரூ.1,13,840-க்கும், ஏப். 28-இல் ரூ.1,040 குறைந்து ரூ.1,12,800-க்கும் விற்பனையானது. தொடர்ந்து, ஏப்.29-இல் பவுனுக்கு ரூ.1,600 குறைந்து ரூ.1,11,200-க்கு விற்பனையான நிலையில், வியாழக்கிழமை காலை விலை மாற்றமின்றி விற்பனையானது.

பின்னர், மாலை நேரத்தில் விலை உயர்ந்தது. அதன்படி, கிராமுக்கு ரூ.200 உயர்ந்து ரூ.14,100-க்கும், பவுனுக்கு ரூ.1,600 உயர்ந்து ரூ.1,12,800-க்கும் விற்பனையானது.

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்களா 6வது பிளாக், கோரமங்களா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: SF எண்.117, கதவு எண்.168 [3/2], UKPN காம்ப்ளக்ஸ், பழனி ரோடு, உடுமலைப்பேட்டை, தமிழ்நாடு-642126

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்புநடைமுறை விதிகள் 2002 விதி எண். 8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	கடன் நிலுவைத் தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை (EMD)
1189210170000017 / 1. Mr.ராதாகிருஷ்ணன் 2. Mrs.மஞ்சுளா	(I) 10.01.2025 & 01.01.2025 அன்றுள்ளபடி ₹ 12,12,288/- (ரூபாய் பன்னிரண்டு லட்சத்து பன்னிரண்டாயிரத்து இருநூற்று எண்பத்தெட்டு மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 13.05.2025 & நேரடி சுவாதீனம் - 21.02.2026	10.04.2026 அன்றுள்ளபடி ₹ 15,40,861/- (ரூபாய் பதினைந்து லட்சத்து நாற்பதாயிரத்து எண்ணூற்று அறுபத்தொன்று மட்டும்)	₹ 19,00,000/- (ரூபாய் பத்தொன்பது லட்சம் மட்டும்)	₹ 1,90,000/- (ரூபாய் ஒரு லட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும்)

சொத்து விவரம்: திருப்பூர் பதிவு மாவட்டம், உடுமலைப்பேட்டை சார்-பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, தத்தும் S.F.எண்.55, தும்பலப்பட்டி கிராமம், உடுமலைப்பேட்டை தாலுகா என்னும் முகவரியில் கிழக்கு மேற்காக வடக்கில் 42 அடி, கிழக்கு மேற்காக தெற்கில் 33 அடி, வடக்கு தெற்காக கிழக்கில் 55 அடி, வடக்கு தெற்காக மேற்கில் 46 அடி ஆக மொத்தம் 1932 சதுர அடி நிலம் அதிலுள்ள கட்டிடம், பொது சாலையை உபயோகிக்கும் உரிமை மற்றும் அனைத்து இதர அனுபந்தங்கள். அதன் கதவு எண்.2/48 சொத்து வரி 376 மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: கருப்புசாமி-க்கு சொந்தமான வீட்டிற்கு வடக்கு, பழனி போயன் மற்றும் மற்றவர்களுக்கு சொந்தமான வீட்டிற்கு தெற்கு, காளிமுத்து, பழனிசாமி ஆகியோருக்கு சொந்தமான வீட்டிற்கு கிழக்கு, வடக்கு தெற்கு வழிப்பாதைக்கு மேற்கு.

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 10.06.2026 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி	சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம்
09.06.2026 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை	08.06.2026 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி : Mr.ராம்பிரசாத் - 95009 96689 & 95666 66963 / / Mr.டீஜோ சாஜன் – 78451 92961

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான M/s.C1 India PVT LTD. மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு Mr.பிரபாகரன் Mob.74182 81709) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை https://www.bankeauctions.com-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். M/s. C1 India PVT LTD, Helpline Number's-7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.
விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com

ஒப்பம்/-
தேதி: 01.05.2026, இடம்: பெங்களூரு — அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

கனரா வங்கி Canara Bank — சிண்டிகேட் Syndicate

டிமாண்ட் நோட்டீஸ்

கிளை - கடன்வசூல் மேலாண்மைக் கிளை, கோயமுத்தூர். குஜராத்தி சமாஜ் பில்டிங், எண். 661-1, மேட்டுப்பாளையம் ரோடு, ஆர்.எஸ்.புரம், கோயமுத்தூர் - 641 002.

போன் : 0422 2555655, 2549459, 2558482. இ-மெயில் : cb4712@canarabank.com

பெறுநர் : திரு. ஆனந்தராஜ் B N, த/பெ. நடராஜன் B N, எண்.3/450, பைபங்கி கிராமம், ஃபார்ம் டீ எஸ்டேட் அஞ்சல், கோத்தகிரி, நீலகிரி – 643 217. திரு. ஹரியன் நஞ்சா கவுடர், த/பெ. நஞ்சா கவுடர், எண்.3/457, பைபங்கி கோத்தகிரி வெஸ்ட் புரூக் நடுஹட்டி ஃபார்ம் டீ எஸ்டேட், கோத்தகிரி, நீலகிரி – 643 217.

அன்புடையீர்,

பொருள் : 2002ம் ஆண்டு செக்யூரிடைசேஷன் அண்டு ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆஃப் பைனான்சியல் அஸெட்ஸ் மற்றும் என்போர்ஸ்மெண்ட் ஆப் செக்யூரிட்டி இன்டரெஸ்ட் சட்டம் ஆகிய சட்டங்களின் பிரிவு 13(2) கீழ் வழங்கப்படும் டிமாண்ட் நோட்டீஸ்

தாங்கள் திரு. ஆனந்தராஜ் B N கீழ்வரும் விபரப்படி கனரா வங்கி, ஊட்டி கிளை-யிலிருந்து சில கடன் வசதிகளைப் பெற்றிருக்கிறீர்கள்.

வ எண்.	கடன் வகை- நிதி அடிப்படையிலானது	கடன் தொகை	நிலுவைத் தொகை 29.04.2026 தேதி வரை	வட்டி விகிதம்*
1.	FDL – 1234883012462	ரூ.17,15,000/–	ரூ. 30,08,085.19	11.75 %
2.	KISAN OD – 1234897000005	ரூ.1,50,000/–	ரூ. 3,55,938.56	10.10 %
3.	KCC – 1234840012990	ரூ.1,35,000/–	ரூ. 1,93,637.33	10.10 %

* அபராத வட்டி நீங்கலாக.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கடன்கள் இந்த நோட்டீசின் கீழ் குறிப்பிட்டுள்ள சொத்தினை வங்கியிடம் அடமான முறையில், சொத்தின் பத்திரங்களைத் தந்து தாங்கள் கடன் பத்திரத்தை வங்கிக்கு எழுதிக் கொடுத்திருக்கிறீர்கள். கடன் வசதி பெற்றுள்ள மேலே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள் ஆகிய நீங்கள் ஒப்புக் கொண்ட நிபந்தனைகளுக்கு ஏற்ப, தங்களது கடன்களைத் திர்த்துக் கொடுக்கத் தவறி விட்டீர்கள். எனவே இந்தக் கடன் கணக்குகளை 28.12.2023 தேதியில் வங்கி 'செயலிழந்த கணக்குப் பிரிவில்' (என்.பி.ஏ.) சேர்த்துள்ளது. எனவே சட்டப் பிரிவு 13(2)ன் கீழ் இந்த நோட்டீஸ் மூலம் 29.04.2026 தேதி வரையான உங்களது கடன் பாக்கி முழுமையும் ரூ.35,57,661.08 (ரூபாய் முப்பத்து ஐந்து லட்சத்து ஐம்பத்து ஏழாயிரத்து அறுநூற்று அறுபத்து ஒன்று மற்றும் பைசா எட்டு மட்டும்) மற்றும் பின் சேர்ந்துள்ள வட்டி மற்றும் இதர செலவுத் தொகைகள் உட்பட, இந்த நோட்டீஸ் தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள் செலுத்த வேண்டுமென்று தங்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. அவ்வாறு செலுத்தத் தவறினால், வங்கி சட்டப் பிரிவு 13(4)ன் கீழ் தனக்குள்ள ஏதேனுமொரு அல்லது சகல உரிமைகளையும் பயன்படுத்த வேண்டி வருமென்று அறியவும்.

மேலும் எங்களிடம் உங்கள் கடனுக்கு ஆதாரமாகத் தரப்பட்டுள்ள பத்திரங்களுக்குரிய, இதனடியில் குறிப்பிட்டுள்ள சொத்தினை, எந்த ஒரு வகையிலும் வங்கியின் முன் அனுமதியின்றி அன்னியப்படுத்த முயற்சிக்கக் கூடாதென்றும் அறிவிக்கப்படுகிறது. எங்களுக்குள்ள எந்தவொரு உரிமைக்கும் தடையின்றி, நடைமுறையில் உள்ள பிற சட்டங்களைபொட்டியும் இந்த நோட்டீஸ் அனுப்பப்படுகிறது.

பிணையம் வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை மீட்பதில் கிடைக்கும் கால அவகாசத்தைக் கருத்தில் கொள்ளுமாறு சட்டப்பிரிவு 13(8)ன் நிபந்தனைகளுக்கு கடன் வாங்கியவரின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

மேலே குறிப்பிட்டுள்ள கடன்தாரராகிய தங்களுக்கு வங்கியில் தாங்கள் கடைசியாக கொடுத்துள்ள முகவரிக்கு ஒப்புகையுடன் கூடிய பதிவு அஞ்சல் மூலம் நோட்டீஸ்கள் அனுப்பப்பட்டுள்ளது.

அட்டவணை : அடமானப்படுத்தப்பட்ட /பிணையப்படுத்தப்பட்ட சொத்து குறித்த விபரம் :

அசையாச் சொத்து : சொத்தின் உரிமையாளர் : திரு. B N ஆனந்தராஜ். நீலகிரி பதிவு மாவட்டம், கோத்தகிரி சார் பதிவு மாவட்டம், கோத்தகிரி தாலுகா, நடுஹட்டி பஞ்சாயத்து மற்றும் கிராமம், பழைய சர்வே எண்.244/1 B, புதிய சர்வே எண்.375/2. சொந்தமான பரப்பு – 1.13 ஏக்கர் நிலம்; தானமளித்த பரப்பு – 1.00 ஏக்கர் நிலம். எல்லைகள் : கிழக்கு – கில்லானின் போர்ஷன், மேற்கு – திருமதி. சீதையம்மாளின் போர்ஷன், வடக்கு – கில்லான் போர்ஷன், தெற்கு – திருமதி. லட்சுமியம்மாளின் மீதப் போர்ஷன்.

தேதி : 29.04.2026 — அதிகாரபூர்வ அதிகாரி
இடம் : கோயம்புத்தூர் — கனரா வங்கி

Repco ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்

அவினாசி கிளை: எண்.292/6, அஞ்சல் அலுவலகம் தெரு, கோயம்புத்தூர் மெயின் ரோடு, அவினாசி - 641 654

அசையா சொத்து சுவாதீன அறிவிப்பு

பிணைக்காப்பு, நிதிச் சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம் 2002 மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள். 2002 ன் (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002-ன் கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரியாக நியமிக்கப்பட்டவரான கீழே கையொப்பமிட்ட ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மூலம், மேற்படி சட்டம் 13(12) பிரிவின் விதி 9-ன்படி 09.01.2026 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பில் (Demand Notice) குறிப்பிடப்பட்ட கடன் கணக்கு எண். 2091860000300-ன் கீழ் கடன் தொகையான ₹ 11,41,882/- மற்றும் 05.01.2026 முதல் அதற்கான வட்டி, இதர செலவுகளுடன் அறிவிப்பு பெற்ற அறுபது நாட்களுக்குள் திரும்ப செலுத்த வேண்டுமென்று கடன்தாரர்: Mr.வடிவேலு S, S/o.Mr.செல்லமுத்து, எண்.17/85, வள்ளுவர் தெரு, அவினாசி, திருப்பூர் - 641654. மேலும் முகவரி, K-2046, பழங்கரை, தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கம், அவினாசிலிங்கம்பாளையம், பழங்கரை அஞ்சல், அவினாசி, திருப்பூர் - 641 654. மேலும் முகவரி, S.F.எண்.471/2, மனை எண்.43, ஸ்ரீ வெற்றி நகர், கருமபாளையம், வேட்டுவபாளையம், சேவூர் ரோடு, அவினாசி, திருப்பூர் - 641 654. சக-கடன்தாரர்கள்: 1.Mrs.பரமேஸ்வரி, W/o.Mr.வடிவேலு S, எண்.17/85, வள்ளுவர் தெரு, அவினாசி, திருப்பூர் - 641654. மேலும் முகவரி, M/s.ஸ்ரீஸ் பேஷன் டிசைனர்ஸ், எண்.17/85, வள்ளுவர் தெரு, அவினாசி, திருப்பூர் - 641 654. மேலும் முகவரி, S.F.எண்.471/2, மனை எண்.43, ஸ்ரீ வெற்றி நகர், கருமபாளையம், வேட்டுவபாளையம், சேவூர் ரோடு, அவினாசி, திருப்பூர் - 641 654. 2.Mr.தமிழ்செல்வன், S/o.Mr.வடிவேலு S, எண்.17/85, வள்ளுவர் தெரு, அவினாசி, திருப்பூர் - 641 654. மேலும் முகவரி, S.F.எண்.471/2, மனை எண்.43, ஸ்ரீ வெற்றி நகர், கருமபாளையம், வேட்டுவபாளையம், சேவூர் ரோடு, அவினாசி, திருப்பூர் - 641 654. ஜாமீன்தாரர்: Mr.தனபால் V, S/o.Mr.வேலுசாமி, எண்.5/240, ராஜன் நகர், பழங்கரை, அவினாசி, திருப்பூர் - 641 654. மேலும் முகவரி, M/s. NSC ஸ்பின்னிங் மில்ஸ் பிரைவேட் லிமிடெட், S.F.எண்.326, செய்யூரிலிருந்து நம்பியூர் செல்லும் ரோடு, பாப்பன்குளம் அஞ்சல், பவர் ஹவுஸ் எதிரில், செய்யூர், திருப்பூர் - 641 655 ஆகியோருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது.

கடன்பெற்றவர், சக-கடன்தாரர் மற்றும் ஜாமீன்தாரர் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்தவறியதால், குறிப்பாக கடன் பெற்ற நபருக்கும், சக-கடன்தாரருக்கும், ஜாமீன்தாருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பதென்னவென்றால், மேற்படி சட்டம் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படியும், மேற்சொன்ன விதிமுறைகளின் 9வது விதியின் படியும் கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை 25.04.2026 அன்று கீழே கையொப்பமிட்டவர் நிறுவனத்தின் உடைமையாக்கியுள்ளார்.

இது முதற்கொண்டு கடன்பெற்றவரோ, சக-கடன்தாரரோ, ஜாமீன்தாரரோ மற்றும் பொதுமக்களோ இந்த சொத்துக்களில் எந்தவிதமான வில்லங்கங்களும் ஏற்படுத்தக்கூடாது என்றும் அவ்வாறு ஏற்படுத்தினால் அது ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட், அவினாசி கிளை-க்கு வந்து சேரவேண்டிய கடன் கணக்கு எண்.2091860000300-ன் கீழ் கடன் பாக்கித் தொகையான ₹ 12,00,483/- மற்றும் 22.04.2026 முதல் அதற்கான வட்டி, இதர செலவுகளுக்கும் கட்டுப்பட்டவை என்றும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

SARFAESI சட்டம் பிரிவு 13(8)ன் படி கடன் கொடுத்த வங்கியிடம் கடன்பாக்கி வட்டி, இதர செலவுகள், கட்டணங்கள், கம்பெனி செலவிட்ட தொகைகள் ஆகியவற்றை சேர்த்து, கடனுக்கு ஈடான சொத்தின் விற்பனைக்கு அல்லது உரிமை மாற்றித்தர நிர்ணயிக்கப்பட்டுள்ள தேதிக்கு முன்னர் செலுத்திவிட்டால் அந்த சொத்து விற்பனை செய்யப்படமாட்டாது அல்லது உரிமை மாற்றித்தரப் படமாட்டாது என்றும் உங்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

அசையா சொத்து விபரம்

திருப்பூர் பதிவு மாவட்டம், அவினாசி சார் பதிவு மாவட்டம் மற்றும் வேட்டுவபாளையம் கிராம பஞ்சாயத்து எல்லைக்குட்பட்ட S.F.எண்.471/2-ல் ஹெக்டேர் 1.75.0 ஏக்கர் 4.32 Rs.4.84 இதில் தெற்கு கிழக்கு பக்க பகுதியின் எல்லைகள்: M.தங்கவேல் மற்றும் M.நடராஜன்-க்கு சொந்தமான பங்குக்கு தெற்கு, SF எண்.470 மற்றும் 508-க்கு மேற்கு, SF எண்.508-க்கு வடக்கு, M.நடராஜன்-க்கு சொந்தமான நிலத்திற்கு கிழக்கு. இதன் மொத்த பரப்பு 2.26 ½ ஏக்கர் நிலங்கள் வீட்டு மனைகளாக மாற்றப்பட்டு "ஸ்ரீ வெற்றி நகர்" என பெயரிடப்பட்டு இதில் மனை எண்.43, வேட்டுவபாளையம் கிராமம், அவினாசி தாலுகா என்னும் முகவரியில் கிழக்கு மேற்காக இருபக்கமும் 30 அடி, வடக்கு தெற்காக இருபக்கமும் 65 அடி ஆகமொத்தம் 1950 சதுர அடி நிலம், அதிலுள்ள கட்டிடம், அதனுடன் வேதவட்டின் அனைத்து சாலைகளை உபயோகிக்கும் உரிமை, அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: 25 அடி அகல கிழக்கு மேற்கு பஞ்சாயத்து சாலைக்கு தெற்கு, மனை எண்.44-க்கு மேற்கு, பூங்கா இடத்திற்கு வடக்கு, 25 அடி அகல வடக்கு தெற்கு பஞ்சாயத்து சாலைக்கு கிழக்கு.

தேதி: 25.04.2026 — அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்

Muthoot MCred Limited
(Formerly known as Muthoottu Mini Financiers Ltd.)
Registered Office: 65/623-K, Muthoottu Royal Towers, Kaloor, Kochi, Kerala - 682017
www.muthootmcred.com | 0484-2912100 | auction@muthootmcred.com
CIN: U65910KL1998PLC012154 GSTIN: 33AABCM5994M1ZY

GOLD AUCTION NOTICE

பொதுமக்களுக்கும், கடன்தாரர்களுக்கும் இதன் மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால்: கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகளில், கடன்களுக்கு ஈடாக அடகு வைக்கப்பட்டிருந்த தங்க நகைகள் குறித்துப் பலமுறை நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டும், செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைகள் திருப்பிச் செலுத்தப்படாத காரணத்தினால், அந்நகைகள் ஏலம் விடப்படவுள்ளன.

TIRUPUR DISTRICT AUCTION: MUTHOOT MCRED LIMITED FIRST FLOOR 159-AA, COMMERCIAL COMPLEX, KUMRAN ROAD OPPOSITE KARUR VYSYA BANK - KVB, TIRUPUR P.O -TAMILNADU 641601. AUCTION DATE: 15.06.2026

TML-AVINASHI: 605005665, 605005744, 605005748, 605007788. TML-CHAMUNDIPURAM: 48455, 48480, 48886. TML-DHARAPURAM: 28750, 29399, 29511, 29622, 29687. TML-DHARAPURAM ROAD: 59177. TML-KAMARAJ ROAD: 7318344, 7318428, 7318569, 7318581. TML-KANGEYAM MAIN ROAD: 47356, 47358, 47380, 47558, 49012, 49035, 49268. TML-KONGU NAGAR: 67010823. TML-KUMARAN ROAD: 60180, 60194, 60313, 60341, 61010, 61268, 61296. TML-MANNARAI: 51167, 51953, 52752. TML-P N ROAD: 34827, 35265, 36300, 36764. TML-PALLADAM: 1364, 1798, 2270. TML-PITCHAMPALAYAMPUTHUR: 40929. TML-UDUMALAI PETTAI: 14792, 14803, 14820, 14855, 14864, 14870, 16822. TML-VEERAPANDI: 10073476. TML-VELAMPALAYAM-15: 20276, 20892, 21196, 21502, 21736, 21757.

அதிகாரப்பூர்வ ஏலதாரர் முன்னிலையில், பொது ஏலம் அல்லது மின் -ஏலம் வாயிலாக இந்த ஏலம் நடத்தப்படும். திட்டமிடப்பட்ட தேதியில் ஏல நடைமுறைகள் நிறைவடையாத பட்சத்தில், எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல் ஏலத்தை மறுதேதியிடவோ அல்லது வேறு இடத்திற்கு மாற்றவோ நிறுவனத்துக்கு முழு உரிமை உண்டு. அறிவிக்கப்பட்ட தேதியில் அந்த மாவட்டத்தில் ஏலம் வெற்றிகரமாக நடைபெறாத பட்சத்திலோ, அதே ஏலம் பிற்காலத்தில் வேறொரு தேதியில், அண்டை மாவட்டத்தில் அல்லது ஓர் இணையவழி ஏலமாக நடத்தப்படலாம்; இதற்கும் எவ்வித முன்னறிவிப்பும் தேவைப்படாது. ஏல காலஅட்டவணையில் ஏதேனும் மாற்றங்கள் இருப்பின், அவை அந்தந்த கிளைகள் மற்றும் ஏல மையங்களில் காட்சிப்படுத்தப்படும். மேலும் தகவல்களுக்கும், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், ஏலத்தில் பங்கேற்கப் பதிவு செய்வதற்கும், ஆர்வமுள்ள வாங்குநர்கள் முத்தூட் எம்கிரெட் நிறுவனத்தின் ஏலத் துறையை auction@muthootmcred.com என்ற மின்னஞ்சல் முகவரியில (முத்தூட்டு மினி ஃபைனான்சியர்ஸ் லிமிடெட் என முன்பு அறியப்பட்டது) நேரடியாகத் தொடர்பு கொள்ளலாம். குறிப்பு:- 1. பங்கேற்பதற்கு விரும்பும் ஏலதாரர்கள் ரூ.2,00,000/- டேவணி தொகையை நிறுவனத்தின் கணக்கில் செலுத்துவதுடன் அடையாள அட்டை/அங்கீகாரமளிப்பு சீட்டு/ நிரந்தர கடன் அட்டை எண்/GST சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும். 2. வெற்றி பெற்ற ஏலதாரர்கள் மொத்தத் தொகையையும் RTGS மூலம் செலுத்த வேண்டும்.

Place: Kaloor,
Date: 01/05/2026.

Authorised Officer,
Muthoot MCred Limited